<u>அசல் வழக்கு எண்.2/2019</u>

**<u>தேதி: 29.04.2025.</u>**

**<u>வா.சா.2:</u> 25.03.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**<u>சாட்சி பெயர்</u>- திரு.நடராஜன், த/பெ. பச்சயப்ப பிள்ளை**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

நான் பணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர். நான் நில புரோக்கர் வேலையை 15 வருடங்களாக செய்து வருகிறேன். அதனால் எனக்கு நிலம் வாங்குவது விற்பது குறித்து நன்றாக தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். பொதுவாக ஒரு நபர் ஒரு சொத்தை விற்பது என்பது அவசத்திற்காக விற்பது என்றால் சரிதான். அதேபோல், அவசர பண தேவைக்காகவும் சொத்தை விற்பார்கள் என்றால் சரிதான். நான் தான் தாவா சொத்தை முன்னின்று பேசி முடித்தேன் என்றால் சரிதான்.

தாவா சொத்த திருவண்ணமாலை மாவட்டம் பிரம்மதேசம் கிராமத்தில் உள்ளது. மொத்தம் 12 ஏக்கர் 38 செண்ட் விஸ்தீரணம் என்றால் சரிதான். தாவா சொத்து மொத்தம் ஒரே இடத்தில் உள்ளது என்றால் சரிதான். 12 ஏக்கர் 38 செண்ட் நிலம் ஒரே இடத்தில் கிடைப்பது என்பது அபூர்வம் என்றால் சரிதான். நிலம் விற்பனைக்கு உள்ளது என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதிகள் தான் என்னிடம் கூறினார்கள்.

பிரதிவாதிகள் என்னிடம் கூறிய பிறகு நான் நேரடியாக சென்று பார்த்தேனா என்றால் நேரடியாக சென்று பார்த்தேன். தாவா சொத்தில் ஒரு கிணறு மற்றும் ஒரு மின்னிணைப்பு உள்ளது. வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் என் நண்பர்.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது ).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.